DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No.CC.No.210/2023**

**prosecution witness: PW-1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்ச்செல்வன் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>04.09.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் காளையார்கோவில் தாலுகா, மேட்டுப்பட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 02.10.2022ம் தேதி காலை 07.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது முத்துமாணிக்கம் மகன் சதீஸ்குமார் என்பவர் எனக்கு போன் செய்து என் தங்கையின் கணவர் சுரேஷ் மற்றும் அவருடன் வேலை பார்க்கும் கண்ணப்பன், உதயா (எ) வேலுச்சாமி ஆகியோர்கள் இராமேஸ்வரத்திற்கு சுற்றுலா வந்ததாகவும், இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த தங்கையின் கணவர் சுரேஷ், உதயா (எ) வேலுச்சாமி இருவரும் பாம்பன் பாலத்தில் இராமேஸ்வரம் நோக்கி வரும்போது முன்னால் சென்ற டிப்பர் லாரி அதிவேகமாக சென்று திடீரென்று பிரேக் போட்டதால் பின்னர் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த சுரேஷ், உதயா (எ) வேலுச்சாமி ஆகிய இருவரும் முன்னால் சென்ற டிப்பர் லாரியில் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள்.

2. காயம்பட்ட இருவரையும் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அங்கு என் தங்கையின் கணவர் சுரேஷ் என்பவர் சம்பவ இடத்தில் இறந்தவிட்டார். உதயா (எ) வேலுச்சாமி என்பவர் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்றுக்கொண்டு இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

3.அன்றைய தினம் காலை 11.00 மணியளவில் நானும், எனது தம்பியும் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் இருந்த சுரேஷ் என்பவரின் உடலை பார்த்தோம். அவருக்கு தலை மற்றும் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டிருந்தது, முகம் சிதைந்திருந்தது. பின்னர் நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க கோரி பாம்பன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரிதான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிவந்தவர் என்று கேள்விபட்டேன். பாம்பன் காவல்நிலையத்தில் வைத்து அவரை பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

1.எனது தங்கையின் கணவருடன் வந்தவர்கள் எத்தனை பேர் என்றால் பைக்கில் இருவர், காரில் 4 நபர்கள் வந்தார்கள். காரில் வந்தவர்கள் சதீஸ், கண்ணப்பன், அவருடைய மகன், மற்றொருவர் பெயர் தெரியாது. சதீஸ் என்பவர் மேட்டுப்பட்டியை சேர்ந்தவர். சதீஸை காவல் சென்று புகார் கொடுக்க சொன்னேனா என்றால் இல்லை. சதீஸ் 9ம் வகுப்பு படித்துள்ளார். அவர்கள் வந்த கார் யாருடையது என்றால் சதீஸ் கார் ஆகும்.

2.காளையார்கோவில் இருந்து இராமேஸ்வரம் வரவேண்டும் என்றால் மானமதுரை வழியாக சத்திரக்குடி டோல்கேட்டை கடந்தும், திருவாடனை வழியாக வந்தால் திருவாடனை டோல்கேட்டை கடந்து வரவேண்டும் என்றால் சரிதான். சதீஸ் என்பவர் வந்த காரின் பதிவு எண் தெரியாது. அன்றைய தினம் காரில் யாரும் இராமேஸ்வரம் வரவில்லை, அவ்வாறு காரில் வந்திருந்தால் இரண்டு டோல்கேட்டில் காரின் பதிவு எண் வந்திருக்கும் என்றால் சரிதான்.

3.எங்கள் ஊரில் இருந்து இராமேஸ்வரத்திற்கு பைக்கில் வரவேண்டும் என்றால் 3 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். எனது மாமா அதிகாலையில் கிளம்பியிருந்தால் தான் பாம்பனுக்கு 07.00 மணிக்கு வந்தடைய முடியும் என்றால் சரியல்ல அவர்கள் எங்கள் ஊரில் இருந்து இரவு 01.00 மணிக்கு கிளம்பி மண்டபத்தில் ஓய்வு எடுததுவிட்டு பாம்பனுக்கு வந்துள்ளார்கள்.

4.நான் கொடுத்த புகாரை எனது சகோதரர் எழுதினார். அதில் என்ன எழுதியிருக்கிறது என்று எனது சகோதரரிடம் கேட்டால் தான் தெரியும் என்றால சரியல்ல. அந்த புகாரை நானும், எனது சகோதரரும் எழுதவில்லை என்றால் சரியல்ல. புகாரில் இடம் விட்டு எழுதப்பட்டு பின்னர் இடம் பத்தாமல் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. லாரிக்கு பின்னால் சென்று தான் எனது மாமா மோதியுள்ளார் என்றால் சரிதான். ஒருவாகனத்திற்கும், மற்றொரு வாகனத்திற்கும் இடையே 10 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியும். வேகத்தடை இருந்ததை கவனிக்காமல் எனது மாமாதான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

5.விபத்து காப்பீடு வழக்கிற்காக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/—S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No.CC.No.210/2023**

**prosecution witness: PW-2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலுச்சாமி | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>04.09.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் சிவகங்கை மாவட்டம் ஆலன்குடியில் வசித்து வருகிறேன். வோடபோன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2022ம் வருடம் நானும், சுரேஷ் என்பவரும் இருசக்கர வாகனத்தில் காளையார் கோவிலில் இருந்து இராமேஸ்வரத்திற்கு சென்றபோது பாம்பன் பாலத்தில் காலை 07.00 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு முன்னால் ஒரு டிப்பல் லாரி சென்று கொண்டிருந்தது. அந்த டிப்பர் லாரி வேகமாக சென்று திடீரென்று பிரேக் போட்டதால் நாங்கள் சென்ற இருசக்கர வாகனம் டிப்பர் லாரியில் மோதி எனக்கும், சுரேஷ் என்பவரும் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது. அதில் எனக்கு வலது புற உதடு, இடது காலில் காயம் ஏற்பட்டது. சுரேஷ் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது.

2.பின்னர் என்னையும், சுரேஷ் என்பவரையும் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். சுரேஷ் என்பவர் இறந்துவிட்டதாக நான் பின்னர் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1. போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக எப்போது விசாரித்தார்கள் என்றால் 15ம் தேதி விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் நான் தற்போது முதல்விசாரணையில் சொன்னததைத்தான் சொன்னேன் என்றால் சரிதான். சுரேஷ் அன்றைய தினம் ஹெல்மேட் அணிந்துவரவில்லை என்றால் சரிதான். விபத்து சுரேஷ் என்பவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இரண்டு வாகனங்களுக்கு இடையே 10 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்றால் என்றால் சரிதான்.

2.வேகத்தடையில் பிரேக் போடுவது இயல்பு என்றால் சரிதான். இந்த விபத்து சுரேஷ் என்பவரது கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை 108 ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்றார்கள். யார் கொண்டு போய் சேர்த்தார்கள் என்று தெரியாது.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No.CC.No.210/2023**

**prosecution witness: PW-3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதீஸ்குமார் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>04.09.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

1.நான் காளையார்கோவில் மேட்டுப்பட்டியில் வசித்து வருகிறேன். வோடபோன் Distributor ஆக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 02.10.2022ம் தேதி காளையோர்கோவிலில் இருந்து இராமேஸ்வரத்திற்கு சுற்றுலாவிற்காக நானும், எனது மனைவி, கண்ணப்பன் மற்றும் ஜெயந்தன் ஆகியோர் swift desire காரிலும், சுரேஷ் மற்றும் வேலுச்சாமி என்பவர்கள் இருசக்கர வாகனத்திலும் வந்தோம்.

2.அப்போது காலை 07.00 மணியளவில் பாம்பன் பாலத்தில் வந்துகொண்டிருந்தபோது முன்னால் இருசக்கர வாகனத்தில் சுரேஷ் மற்றும் வேலுச்சாமி சென்றுகொண்டிருந்தார்கள் நாங்கள் எங்கள் காரில் பின்னால் வந்து கொண்டிருந்தோம். அப்போது இருசக்கர வாகனத்திற்கு முன்னால் ஒரு டிப்பர் லாரி வேகமாக சென்று கொண்டிருந்தது, திடீரென்று sudden break போட்டதால் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த சுரேஷ் மற்றும் வேலுச்சாமி இருவரும் டிப்பர் லாரியில் மோதி கீழே விழுந்துவிட்டார்கள். சுரேஷ் என்பவருக்கு தலையில் மற்றும் கையிலும் காயம் ஏற்பட்டது வேலுச்சாமிக்கு நெற்றியிலும், கையிலும் காயம் ஏற்பட்டு மயக்க நிலையில் இருந்தார்.

3. உடனே காயம்பட்டவர்களை ஆம்புலன்ஸ் மூலம் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். சுரேஷ் என்பவரை பரிசோதனை செய்த

மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக சொன்னார். வேலுச்சாமி என்பவர் மேல்சிகிச்சைக்ககாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நான் சுரேஷ்இறந்த விபரத்தை அவரது மச்சான் தமிழ்ச்செல்வன் என்பவரிடன் போன் மூலம் சொன்னேன்.

4.மேற்படி தமிழ்ச்செல்வன் மற்றும் அவரது உறவினர்கள் மருத்துவமனைக்கு வந்து பார்த்துவிட்டு நடந்த சம்பவத்திற்கு தமிழ்செல்வன் என்பவர் பாம்பன் காவல்நிலையத்தில் புகார்கொடுத்தார். அன்றைய தினம் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1.விபத்து நடந்ததாக சொல்லும் போது சரியாக நேரம்என்ன இருக்கும் என்றால் காலை 07.00 மணி இருக்கும். கால் மணி நேரம் கழித்து ஆம்புலன்ஸ் வந்தது. வேலுச்சாமி (எ) உதயாவை நான் மருத்துவமனையில் சேர்த்தேனா என்றால் சேர்க்கவில்லை. நான் சுரேஷ் உடன் இருந்தேன். சுரேஷை மற்றொரு ஆம்புலன்சில் அரை மணி நேரம் கழித்து ஏற்றி சென்றோம்.

2. நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. விபத்து ஏற்பட்டதாக சொல்லும் நேரத்தில் நான் 300 மீட்டர் பின்னால் வந்தேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் உண்டு. வேகத்தடைகள் வாகனங்கள் நிறுத்தி மெதுவாக செல்லவேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் வேகத்தடைகள் நிறுத்தி மெதுவாக செல்லவேண்டும் என்பது சாலைவிதி என்றால் சரிதான். விபத்து சுரேஷ் என்பவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் அந்த இடத்தில் இல்லை என்றாலும், காயம்பட்ட நபர் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லாததால் தான் 06.00 மணிக்கு சிகிச்சையில் சேர்த்த நபரை 07.00 மணிக்கு விபத்து ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No.CC.No.210/2023**

**prosecution witness: PW-4**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணப்பன் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>04.09.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

1.நான் புலவர் மருதக்குடியில் வசித்து வருகிறேன். வோடபோன் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 02.10.2022 ம் தேதி நான், என்னுடன் வேலை செய்யும் வேலுச்சாமி, சதீஸ்குமார், சுரேஷ் மற்றும் அவரது மகன் ஜெயந்தன் ஆகியோர் இராமேஸ்வரத்திற்கு சுற்றுலாவிற்கு வந்திருந்தோம். நான் எனக்கு சொந்தமான TN 63 BK 4352 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் இராமநாதபுரத்திற்கு வந்தேன். மற்றவர்கள் அனைவரும் swift desire காரில் வந்திருந்தார்கள். இராமநாதபுரம் பைபாஸ் ரோட்டில் நான் காரில் ஏறிக்கொண்டு சுரேஷ் மற்றும் வேலுச்சாமி எனது இருசக்கர வாகனத்தில் இராமேஸ்வரம் நோக்கி பயணம் செய்தோம்.

2. இருசக்கர வாகனம் முன்னால் சென்று கொண்டிருந்தது, நாங்கள் அவர்களுக்கு பின்னால் வந்து கொண்டிருந்தோம். அன்று காலை சுமார் 06.30 முதல் 07.00 மணியளவில் பாம்பன் பாலத்தில் சென்றபோது எங்களுக்கு முன்னால் ஒரு டிப்பர் லாரி சென்று கொண்டிருந்தது. அந்த டிப்பர் லாரி திடீரென்று பிரேக் போட்டதும், அதற்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் சென்ற சுரேஷ் மற்றும் வேலுச்சாமி இருவரும் அந்த டிப்பர் லாரியில் மோதி கீழே விழுந்துவிட்டார்கள். நாங்கள் சென்று பார்த்தபோது சுரேஷ் என்பவருக்கு தலையிலும் முகத்திலும் காயங்கள் ஏற்பட்டு பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தார். வேலுச்சாமி என்பவருக்கு கை, காலிலும், உதட்டிலும் காயங்கள் ஏற்பட்டு மயக்கநிலையில் இருந்தார். பின்னர் சுரேஷ் என்பவரை

ஆம்புலன்ஸ் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக சொன்னார். வேலுச்சாமி என்பவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

3.பின்னர் எங்கள் ஓனர் சதீஸ்குமார் சுரேஷ் என்பவரின் அ.சா.1 க்கும் அவரது குடும்பத்துக்கும் தகவல் சொன்னார். பின்னர் அவர்கள் பாம்பன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிவந்தவர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

1.இந்த வழக்கு சம்பந்தமாக நானோ, எனது முதலாளியோ புகார் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். அப்போது நேரம் என்ன இருக்கும் என்றால் சரியாக ஞாபாகம் இல்லை. வேலுச்சாமியை என்னுடன் வந்த ஹரீஷ் பாண்டி என்பவர் மருத்துவமனையில் சேர்த்தார். போலீசார் விசாரணையில் தற்போது முதல்விசாரணையில் சொன்னததைத்தான் சொன்னேன் என்றால் சரிதான்.

2. சுரேஷ் என்பவர் விபத்து சமயத்தில் ஹெல்மேட் அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார். இறந்தவர் எனது நண்பர் என்பதால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் இருசக்கர வாகனத்திற்கு 100, 200 மீட்டர் பின்னால் வந்தோம். விபத்து சுரேஷ் என்பவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.